**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 127/2023 P.W. 4 /L.W11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. கிறிஸ்டி** | **Caste** | : | |
| **Father's Name** | : | த/பெ. | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 30.10.2023.**

**<u>அரசுத்தரப்பு முதல் விசாரணை</u>** :

**<u>குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்</u>**

1. நான் தற்பொழுது குளச்சல் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். 31.12.2022 ம் தேதி காலை 05.00 மணிக்கு கிடைத்த ரகசிய தகவல் படி குளச்சல் காவல் ஆய்வாளராகிய நான் போலீஸ் பார்ட்டி சகிதம் **குளச்சல் காவல்நிலையக்குற்ற எண். 52/2022** ச/பி. 457, 380 இ.த.ச 1860 ன் கீழ் வழக்கில் எதிரிகளைத் தேடி குளச்சலில் இருந்து மண்டைக்காடு செல்லும் ரோட்டில் வெட்டுமடை இசக்கியம்மன் கோவில் அருகில் போலீஸ் பார்ட்டிகள் சகிதம் வாகன தணிக்கைச் செய்துக்கொண்டிருந்தேன்.

2. அப்போது கிழக்கிலிருந்து மேற்காக டி.என் 74 எ.எஸ். 4092 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தில் வந்துக்கொண்டிருந்து போலீஸ் பார்ட்டியை கண்டதும் திரும்பிச் செல்ல முயன்ற பின்னர் ஊர் பெயர் கேட்டுத் தெரிந்த கப்பியறை, நகரபொற்றவிளை, தற்சமயம் AJK, COMPLEX காவல்கிணறு விலக்கு மரியமான் என்ற மரியதாஸ்மகன் ஷாபு மோன் மற்றும் பின்னால் இருந்த அழகியபாண்டியபுரம் பிளவக்கல்விளை, முகமது அலி மகள் நூர்ஷகான் ஆகியோர்களை சுற்றி வளைத்து பிடித்து அவ்விடம் வழியாக வந்த ஆஜர் சாட்சிகள் ரீத்தாபுரம், சிதம்பரம் மகன் அறிவழகன், வித்யாதரன் மகன் ஜெகதீஸ் ஆகியோர்கள் முன்னிலையில் விசாரித்த போது மேற்படி குற்றம் சுமத்தப்பட்ட நபர்களில் 1வது நபரான ஷாபுமோன் என்பவர் எவ்வித துன்புறுத்தலோ, ஆசை வார்த்தைகளோ இன்றிதானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தைப் பதிவுச் செய்தேன். அதில் சாட்சிகளிடமும், குற்றம் சுமத்தப்பட்ட நபரிடமும் கையொப்பம் பெற்றேன். **ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ. 6 ஆகும்.**

3. ஒப்புதல் வாக்குமூலத்தின் படி 31.12.2022 ம் தேதி காலை 09.00 மணி அளவில் மேற்படி வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட நபர் கொள்ளையடித்த சுமார் 6 அரை பவுன் தங்க தாலிச்செயினை

நூர்ஷகானிடம் இருந்து வெட்டுமடை இசக்கியம்மன்கோவில் அருகில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றினேன். **மேற்படி அத்தாட்சி அ.சா.ஆ.7 ஆகும்.** இது சம்மந்தமாக வழக்கின் புலன்விசாரணை அதிகாரியிடம் நான் ஆவணங்களையும், தடயத்தையும் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை** :

1. குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஷாபுமோனின் தற்சமய முகவரியைப் பொறுத்து அவர் அங்கு தான் வசித்து வருகிறார் என்பதை நான் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். மேற்படி நபர் அந்த முகவரியில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. 2 வதுகுற்றம் சுமத்தப்பட்ட நபரான நூர்ஜகான் மேற்படி முகவரியில் வசிக்கவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் புகார்தாரருக்கு இழப்பு ஏற்பட்டது எத்தனை பவுன் என்றால் 6 அரை பவுன் ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் 6 வது பக்கத்தில் 6 பவுன் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை குற்றம் சுமத்தப்பட்ட நபர்தான் சொன்னார்.

2. நான் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்வது ஒப்புதல் வாக்குமூலத்தின்அடிப்படையில் தான் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் எனது வாக்குமூலத்திற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளார்கள்என்றால் அது குறித்து எனக்குத் தெரியாது. இன்னொரு காவல் அதிகாரி நகை கடையில் இருந்து கைப்பற்றிக் கொடுத்த நகையை இவ்வழக்கின் தடயப்பொருளாக நான் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன விதத்தில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவுச் செய்யவில்லை என்றாலும், தடயப்பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் கணக்கிற்காக வழக்கில் நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.